IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S.No.176 /2012
Deposition of witness for DW1

Name: ஆரோக்கியமேரி Caste:-

Father's Name: அல்போன்ஸ் Calling:-

Village: மாதவரம், சென்னை Religion: கிருஸ்டியன்

Taluk: Age:51

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05 day of March, 2018.

Cross Continuation Examination:

என்னிடம் காண்பிக்கப்படும் பத்திரம் தான் எங்கள் மடத்திற்கு நான் குத்தகைக்கு போட்ட பத்திரம் என்றால் சரிதான். மேற்படி குத்தகை பத்திரம் பள்ளியின் பெயருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதில் தலைமை ஆசிரியர் பெயர் கூறப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி குத்தகை ஆவணத்தில் அது எவ்வாறு எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2012-ல் வாதியின் மாமியார் பெயரில் இருந்த தாவா சொத்தை பட்டா, சிட்டா மாற்றம் செய்யவேண்டி எங்களது பெயருக்கு தவறாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் இல்லை. பி.வா.சா.ஆ 5 மற்றும் 7 ஆவணங்களை உருவாக்கவே இந்த குத்தகை ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை இதற்கு முன்பும் குத்தகைக்கு விடப்பட்டு குத்தகை ஆவணங்கள் உள்ளது. மேற்படி குத்தகை ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் உள்ளது அது போல் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 26.09.2012-ல் பி.வா.சா.ஆ3 பெறப்பட்டுள்ளது என்றும் அப்பொழுது தான் அ பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று கூறினால் அதுபோல் இல்லை அன்றைய தேதியில் மேற்படி ஆவணங்களை நாங்கள் பெற்றுக்கொண்டோம் மாற்றம் எதுவும் செய்யவில்லை. வாதியின் மாமியார் பெயரிலேயே தாவா சொத்துக்கள் அனைத்தும் இருந்தது என்றும் 2012-ம் ஆண்டிலேயே மேற்படி சொத்தை எங்களது பெயரில் தவறாக மாற்றம் செய்து பி.வா.சா.ஆ 3,5 மற்றும் 7 ஆகியவைகள் முறைகேடாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் அது சரியல்ல

WEB COPY

அதற்கு முந்தைய காலத்திலும் மேற்படி ஆவணங்கள் உள்ளது. அதற்கு முந்தைய காலத்தில் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் வரி கட்டிய ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1915 முதல் 1962 வரையிலான வில்லங்கசான்றிதழ் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ 1-ல் எங்கள் பெயரில் தாவா சொத்துக்கள் இல்லை என்று கூறினால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் 2012-க்கு பிறகுள்ள ஆவணங்கள் என்றும் அதற்கு முன்பு தாவா சொத்து குறித்து எங்கள் பெயரில் வருவாய்ததுறை ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வாதியின் மாமியார் பெயரில் இருந்த தாவா சொத்துக்களை சட்டத்திற்கு புறம்பாக எந்த ஒரு ஆவணங்களும் இல்லாமல் தவறாக எங்கள் பெயருக்கு மாற்றம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் மேற்படி மடத்திற்கு பொறுப்புக்கு வந்த காலத்தில் என்னிடம் தாவா சொத்து ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்ட போது தற்போதுள்ள நிலையிலேயே இருந்தது. பி.வா.சா.ஆ 1-ல் எங்களுக்கு தாவா சொத்தை விற்றதாக கூறப்படும் ஜோஜப்ப கவுண்டர் அவருக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபோல் அதில் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றும் தாவா சொத்திற்கும் ஜோஜப்ப கவுண்டருக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2012-ம் வருடம் தாவா சொத்திற்கு பட்டா பெறவில்லை என்று நிரூபிக்க முடியுமா என்றால் முடியும். 1 முதல் 7 பிரதிவாதிகளைப்பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய பதிலுரையில் கூறிய தகவல்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் 1 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் எனக்கு சார்பாக நடந்து கொள்கிறன்றனர் என்றால் சரியல்ல. 1ம் வாதியின் கணவர் இறந்த காரணத்தினால் சொத்து குறித்து 1 முதல் 7 பிரதிவாதிகள் 1ம் வாதியிடம் தகறாறில் உள்ளதால் பிரதிவாதிகள் எனக்கு ஆதரவாக உள்ளனர் என்றால் சரியல்ல. தாவாபடி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

WEB COPY